AUSTRALIAN TAMIL
MANAGEMENT SERVICE
Channel Partner – University of Technology (UTS-Insearch)
Australian Participant in International Higher Education

Mr. Xxxxxxx
Manager
Temple
Colombo

03 January 2012

மதிப்புக்குரிய ஐயா அறிவது,

இன்று காலை நான் உங்களிடம் முறைப்பட்ட விஷயம் பற்றி எழுதுகிறேன்

முதலில் எனது முறைப்பாட்டை விசாரித்ததற்கு நன்றி தெரிவிக்கிறேன்

கடவுளின் பக்தையாக பின்வருபவனவற்றை கூறி எனது அனுபவத்தை பகிர விரும்புகிறேன். சம்பந்தப்பட்ட ஐயருடன் தேவையான அளவிற்கு பகிர்வீர்கள் என நம்புகிறேன்

1. என்னைப் பொருத்தவரை நாம் எல்லோரும் கடவுளால் சுதந்திரமானவர்களாக படைக்கப்பட்டுள்ளோம்
2. இந்த உண்மையான சுதந்திரத்தைக் கடைப் பிடிப்போர் இயற்கையாக ஒருவருடன் ஒருவர் இணைந்திருப்பர்
3. இறைவனை உள்ளத்தில் கொண்டிருப்பவர் மற்றவர் உள்ளத்தில் இருக்கும் தெய்வீகத்தின் மூலம் இந்த தொடர்பை உணர்வர்.
4. ஒரு கோயிலில் ஐயர் இந்த நம்பிக்கை மூலமும் பக்தருடன் தொடர்பு கொள்வார்
5. அதே நேரம் கோயில் ஒரு பொது இடமாக இருப்பதால் பொது ஒழுங்குமுறை தேவை
6. எமது ஊர் பக்கங்களில் இந்த முறைகள் என்னவென்று ஐயர் சொல்வது வழக்கம்
7. ஐயருக்கு பொதுவாக ஊரில் பக்தருக்கு இருக்கும் அந்தஸ்த்து என்னவென்றும் தெரிந்திருக்கும்
8. ஆகவே ஐயர் ஊரில் மேலிருந்து சொன்னாலும் அதில் கருத்துப் பிழை இருப்பது குறைவாக இருக்கும்
9. அதே போல ஐயர் குலத்தில் உள்ளவர்களது அந்தஸ்தும் ஐயருக்கு தெரிந்திருக்கும்

**906/ 56, Carr Street; Coogee N.S.W. 2034; Australia**
**Vairavar-Kali Kovil; Sangarathai-Thunaivi; Sri Lanka** **25/2 Maheswari Rd; Colombo 6; Sri Lanka**
**Email** gajalakshmi_param@bigpond.com
**Phone 61 2 9315 7417; 94 21 3201020 ; 94 771117607**
Australian Business Number 34 860 228 526; Sri Lankan Corporate Number P.V. 65187

10. ஆனால் நகரப் பக்கங்களில் இருக்கும் பல கலாச்சார மக்களைப்பற்றி ஐயருக்கு பொதுவாக தெரிந்திருக்காது.
11. ஆகவே பொது முறைப்படி கணித்து பார்த்தால் தர்மத்திலிருந்து விலகாமல் நடக்கலாம்
12. கோயிலுக்கு முறை இருப்பது போல, சமுதாயத்திற்கும் முறைகள் உண்டு
13. இவை பரந்த முறைகள்
14. கோயிலின் முறைகள் இவற்றிற்கு மாறாக இருக்கலாகாது
15. கோயிலின் முறைகள் மக்களின் மனத்தை ஒன்று கூட்டி எடுக்கும் வகையில் அமைய வேண்டும்
16. புலன், புத்தி, புண்ணியம் என்ற மூனறு முறைகள் மூலம் மனதை ஒன்று கூட்டலாம் என மாகான்கள் கூறி உள்ளார்கள்
17. புத்தி புலனை ஒன்று கூட்டி முழுமையான அவதானத்தைக் கொடுக்கும். முருகப் பெருமான் மயில்மீது வலம் வந்து 6 முகத்தால் 360 பாகை அவதானம் கொண்டது போல். (360 degree observation)
18. அப்படி பார்க்கும்போது அந்த இடத்தில் அந்த நேரத்தில என்ன நடந்தது என்று தெரியும்
19. இன்று நீங்கள் எனது முறைப்பாட்டைக் கேட்ட பின் ஐயரையும் கேட்டுத் தெரிந்ததை நான் அப்படியே – 360 பாகை அவதானம் என எடுத்தேன்
20. அந்த அவதானித்த படத்தில் வரவு செலவு - அதாவது யார் கஷ்டத்தைக் கொடுத்தார்கள் யாருக்கு கஷ்டம் கொடுக்கப்பட்டது என்பது இரு பக்கத்திற்கும் சம தூரத்திலிருந்து பார்ப்பவருக்கு தெரியும். அவரே நீதி வழங்க வேண்டும்
21. ஒருவரை மற்றவர் அறியாதவர்களானால் இந்த முறையை பின்பற்றச் சொல்லி ஜனனாயகம் கூறுகிறது
22. இன்று ஐயர் தனதும் தன் குலத்தினதும் கலாச்சாரத்தின்படி நான் தலை மயிரை கட்ட வேண்டும் என்றார்
23. விசாரணையின்போது தான் யாருக்கும் சொல்வேன் என்றார். மைக் பிடித்து சொல்வேன் என்றார்
24. அப்படி எனறால் அது ஒரு பொது முறையாக நிர்வாகத்தினரால் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்
25. அதுவே முறை என மக்களுக்கு வாசலில் அறிவிக்கப்பட வேண்டும்
26. அதற்குப்பிறகும் தலை மயிரைக் கட்டாமல் வருபவரை யாரும் கோயிலுக்குள் கண்டிக்கலாம். கோயிலில் எல்லாருக்கும் உரிமை உண்டு. ஐயருக்கும் சம உரிமை மட்டுமே உண்டு
27. ஐயருக்கு மட்டுமே உரிய வேலைகளுக்கு அவருக்கு விசேஷமாக இடம் உண்டு
28. அதே போல் மற்ற தொழிலாளர்களுக்கும் அவரவர் தொழில்படி
29. பொது மக்களுககு - அதாவது பக்தருக்கு என குறிக்கப்பட்ட இடத்தில் பொது மக்களுக்கே முதலுரிமை உண்டு
30. அதன்படி அந்த குறிக்கப்பட்ட இடத்தில் விதிமுறைப்படி எது சரி எது பிழை என்று கணித்து நடக்கும் உரிமை மக்களுக்கு உண்டு
31. அந்த நடத்தை பிடிக்கா விட்டால் பொது நிர்வாகத்திடம் முறைப்படி முறையிட யாருக்கும் உரிமை உண்டு - ஐயர் உட்பட


**906/ 56, Carr Street; Coogee N.S.W. 2034; Australia**
**Vairavar-Kali Kovil; Sangarathai-Thunaivi; Sri Lanka** **25/2 Maheswari Rd; Colombo 6; Sri Lanka**
**Email gajalakshmi_param@bigpond.com**
**Phone 61 2 9315 7417; 94 21 3201020 ; 94 11 2365502**
Australian Business Number 34 860 228 526; Sri Lankan Corporate Number P.V. 65187

32. எப்படி பக்தர்களுக்கு நேரடியாக ஐயருக்கு மூலஸ்தான அலுவலைப் பற்றி குறையோ நிறையோ கணித்து சொல்லும் உரிமை இல்லையோ அதே போல ஐயருக்கு பக்தருக்கு குறிப்பிட்ட இடத்தில் அவர்களது நடத்தையைப்பற்றி நேரடியாக குறையோ நிறையோ சொல்லும் உரிமை இல்லை என ஜனனாயகம் கூறுகிறது
33. இன்று இந்த சம்பவத்திற்கு முதல் ஒரு ஐயரது முழங்கை தீபம் மக்கள் தொட்டுக்கொள்ள தந்தபோது என்மீது பட்டது. அந்த இடத்தில அவர் தனது கையை எங்களைப் பிரிக்கும் கம்பிக்கு உள்ளே வைத்திருக்க வேண்டும் என்பதே எனது கணிப்பு
34. அதை நான் வெளியே சுட்டிக்காட்டாமல் அவருக்கும் எனக்கும் இறைவனிடம் இருக்கும் பொது நம்பிக்கை மூலம் இறைவனிடம் அவருக்கு உணர்த்தும்படி கும்பிட்டேன்
35. மற்ற ஐயர் எல்லாருக்கும் கேட்கும்படி என்னைக் கண்டித்து தனது நம்பிக்கை எனது நம்பிக்கையைவிட குறைவானது என்று எனக்கு உறுதிப்படுத்தியுள்ளார்
36. உண்மையே நம்பிக்கையின் அடிப்படை
37. நம்பிக்கை மூலம் இருவர்/பலர் ஒருவராகிறோம்
38. சரி பிழை எல்லாம் ஒருவருக்கே
39. அப்படி ஏற்பவர் ஏற்காதவரைவிட நம்பிகையால் உயர்ந்தவர்

இந்த பரிமாறலை பகிரக்கூடிய மனநிலை வருமாறு நடந்த உங்களுக்கு நன்றி

இப்படிக்கு

Gajalakshmi Paramasivam

**906/ 56, Carr Street; Coogee N.S.W. 2034; Australia**
**Vairavar-Kali Kovil; Sangarathai-Thunaivi; Sri Lanka** **25/2 Maheswari Rd; Colombo 6; Sri Lanka**
**Email gajalakshmi_param@bigpond.com**
**Phone 61 2 9315 7417; 94 21 3201020 ; 94 11 2365502**
Australian Business Number 34 860 228 526; Sri Lankan Corporate Number P.V. 65187